**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக** **(15x1=15)**

1. திணை எத்தனை வகைப்படும்?
2. முதல் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
3. உயிரளபெடை எத்தனை மாத்திரை பெறும்?
4. எழுத்துப் பிறப்பிற்கான காற்று உடலின் எப்பகுதியில் இருந்து எழுகின்றது?
5. ஓர் எழுத்து ஒரு மொழி என்றால் என்ன?
6. பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. ஏவல், வியங்கோள் வினைகள் எக்காலத்தைக் காட்டும்?
8. வினைத்தொகைக்கு ஒரு சான்று தருக.
9. கபிலன் + பரணன் – இது புணர்ச்சியில் எவ்வாறு வரும்?
10. நிலா என்ற சொல் செய்யுளில் வேறு எவ்வாறு வழங்குகிறது?
11. ஒன்று என்பது தன்னோடு தானே இரட்டிக்கும் போது எவ்வாறு புணரும்?
12. மகர மெய் ஈற்றுச் சொற்கள், ஈற்று மெய் கெட்டு வருமொழியில் உள்ள உயிரோடு எவ்வாறு புணரும்?
13. நடந்தன்– இதில் வரும் சாரியை யாது?
14. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் மிகுமா?
15. ஆதிபகவன், ஆதிப்பகவன் – இவற்றில் பிழையில்லாத் தொடர் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. வஞ்சித் திணைப் பற்றி விளக்குக.
2. வன்றொடர், மென்றொடர்க் குற்றியலுகரங்களை விளக்குக.
3. தமிழில் மெய்யெழுத்துகளின் வரிசை முறையில் (நெடுங்கணக்கில்) காணப்படும் நுட்பத்தை விளக்குக.
4. பண்புப்பெயர்ப் பகுதிக்கு, நன்னூல் கூறும் சிறப்பு விதி யாது?
5. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன? விளக்குக.
6. ஏகார, ஓகார ஈற்றுச் சிறப்பு விதியை எழுதுக.
7. மீன் என்னும் சொல்லுக்குச் சிறப்பு விதி யாது?
8. எண்ணுப்பெயர்களில் எவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில்விடை தருக.** **(3x15=45)**

1. (அ) யாப்பு இலக்கணம் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

2. (ஆ) எழுத்தொலிகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியமும் நன்னூலும் தெரிவித்த கருத்துகளைத் தொகுத்துரைக்க.
3. (அ) பகுபத உறுப்பகள் குறித்துக் கட்டுரை தருக.

(அல்லது)

4. (ஆ) குற்றியலுகரத்தின் முன்னர் உயிரும் யகரமும் புணரும் விதத்தை விளக்குக.
5. (அ) மகர ஈற்றுப் புணர்ச்சியின் பொது விதியை விளக்குக

(அல்லது)

6. (ஆ)இக்காலத் தமிழில் வல்லினம் மிகா இடங்கள் குறித்து எழுதுக.

•••••••